# ‘ஐ 3 எக்ஸ்போ’ நிறைவு; லட்சம் பேர் கண்டு வியப்பு!

## ரூ. ஒரு லட்சம் பரிசு வென்றார், நெசவு தொழிலாளி

**கோவை, செப். 30 -**

கோவை நகரில், புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு தளம் அமைக்கும் வகையில் நடந்த, ‘ஐ 3’ கண்காட்சியை, லட்சம் பேர் பார்வையிட்டனர். கைத்தறி நெசவுத்தொழிலில், நவீன முறையை புகுத்திய, தொழிலாளியின் கண்டுபிடிப்புக்கு, முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

கோவை, பி.எஸ்.ஜி., முன்னாள் மாணவர் அமைப்பு சார்பில், புதிய கண்டுபிடிப்புகளுக்கான கண்காட்சி, ‘ஐ 3 எக்ஸ்போ’, பீளமேடு ‘கொடிசியா’ தொழிற்காட்சி வளாகத்தில், கடந்த 27ம் தேதி துவங்கி, நேற்றுடன் நிறைவுற்றது. நாடு முழுவதும் இருந்து 550 கண்டுபிடிப்பாளர்களின், 750 புதிய கண்டுபிடிப்புகள், 500 அரங்குகளில் இடம் பெற்றன.

இக்கண்காட்சியில் வேளாண்மை, சூரிய மின் ஆற்றல், பொறியியல், உணவு பதப்படுத்துதல், மருத்துவம், உயிரி மருத்துவம், வீட்டு உபயோக பொருட்கள், உணவுப் பொருட்கள், உணவு பதப்படுத்துதல், சுற்றுச்சூழல், ஜவுளித்துறை, எலக்ட்ரிக்கல், எலக்ட்ரானிக்ஸ் உள்ளிட்ட துறைகள் சார்ந்த, பல்வேறு நவீன கண்டுபிடிப்புகள், பார்வையாளர்களை கவர்ந்தன.

கோவை, திருப்பூர் மாவட்டத்திலுள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். நிறைவு நாளான நேற்று, மாணவர்கள் பெற்றோர்களுடன் ‘விசிட்’ செய்தனர். இதனால், காலை முதல் கூட்டம் அலைமோதியது. நேற்று மதியம் கண்காட்சி நிறைவு விழாவும், சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பரிசளிப்பு விழாவும் நடந்தது.

விழாவில், ஆமதாபாத்தி லுள்ள ‘இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட்’ கல்லூரி டீனும், புதுடில்லியிலுள்ள தேசிய கண்டுபிடிப்பு மைய துணைத்தலைவருமான அனில்குப்தா கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

கைத்தறி நெசவில் நவீன முறையை புகுத்திய, ஆரணியைச் சேர்ந்த நெசவு தொழிலாளி பானுமூர்த்திக்கு, முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாய் காசோலை வழங்கப்பட்டது.

கேரள மாநிலம் கொல்லம் பகுதியைச் சேர்ந்த தாமஸ் எலன் கண்டுபிடித்த, பக்கவாதத்தால் கை, கால் செயல் இழந்தோருக்கான நவீன சக்கர நாற்காலி இரண்டாம் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டு, 75 ஆயிரம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது.

மதுரை வேலம்மாள் கல்லூரி மாணவன் இமானுவேல் ரிச்சர்டு கண்டுபிடித்த, சிறுநீர் கழிப்பிடத்தில் தானியங்கி தண்ணீர் தெளிப்பு சிஸ்டம், மூன்றாம் பரிசாக தேர்வு செய்யப்பட்டு, 50 ஆயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பட்டது. மேலும், 10 பேருக்கு தலா 25 ஆயிரம் வீதம், தகுதி பரிசாக வழங்கப்பட்டது.

கண்காட்சியில் பங்கேற்ற கண்டுபிடிப்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. பி.எஸ்.ஜி., கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், கண்காட்சி தலைவர் வரதராஜன், ஒருங்கிணைப்பாளர் பழனிச்சாமி, பி.எஸ்.ஜி., கல்வி நிறுவன ஆராய்ச்சி தலைவர் பால் தேவ்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

‘ஐ 3 எக்ஸ்போ’ தலைவர் வரதராஜன் கூறுகையில், ‘‘ஜி.ஆர்.டி., நூற்றாண்டு கொண்டாட்டத்தின்போது, கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டது. நாடுமுழுவதும் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களில், 750 புதிய கண்டுபிடிப்புகள் ‘எக்ஸ்போ’வுக்கு தேர்வு செய்யப்பட்டது. மூன்று நாளில், ஒரு லட்சம் பேருக்கு மேல் கண்காட்சியை பார்வையிட்டுள்ளனர். பல கண்டுபிடிப்புகளுக்கு தொழில்நிறுவனங்களிடம் இருந்து அழைப்பு வந்துள்ளது. இக்கண்காட்சியின் வாயிலாக, புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு சிறந்த தளம் கிடைத்துள்ளது. ஒவ்வொரு கண்டுபிடிப்பும் சமுதாயத்துக்கு பயன்படும் வகையில் தொழில்நுட்பங்களாக விரைவில் மாறும்’’ என்றார்.




**முயன்றால் வெற்றி!** புதிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்கும் விதமாக கோவை, பி.எஸ்.ஜி., முன்னாள் மாணவர் அமைப்பு சார்பில், ‘கொடிசியா’ தொழிற்காட்சி வளாகத்தில், ‘ஐ 3 எக்ஸ்போ’ மூன்று நாட்களாக நடந்தது. நிறைவு நாளான நேற்று, சிறந்த கண்டுபிடிப்புகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. பரிசு பெற்றவர்களின் குழு போட்டோ.

## முதல் பரிசு பெற்ற தொழிலாளி!







**சபாஷ்... சரியான கண்டுபிடிப்பு!** கண்காட்சியில் திருவண்ணாமலை, ஆரணியைச் சேர்ந்த பானுமூர்த்தியின், ‘கைத்தறி நெசவில் தானியங்கி கோர்வை முறை’ கண்டுபிடிப்பு முதலிடம் பிடித்தது. இவருக்கு, ஆமதாபாத் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் மேனேஜ்மென்ட் கல்லூரி டீனும், தேசிய கண்டுபிடிப்பு மைய துணைத்தலைவருமான அனில்குப்தா, ஒரு லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். அருகில் [இடமிருந்து] பானுமூர்த்தியின் மகள் வனிதா, கண்காட்சி ஒருங்கிணைப்பாளர் பழனிச்சாமி, பி.எஸ்.ஜி., கல்வி நிறுவனங்களின் அறங்காவலர் கோபாலகிருஷ்ணன், ஐ.ஐ.எம்., பேராசிரியர் அனில்குப்தா, கண்காட்சி தலைவர் வரதராஜன், கல்லூரி முதல்வர் ருத்ரமூர்த்தி.

### 2வது பரிசு




மாற்றுத்திறனாளிகளுக்கான நவீன சேர், கழிப்பறை வசதியுடன் கூடியது. இரண்டாம் பரிசு பெற்றது. **உள்படம்:** கண்டுபிடிப்பாளர் தாமஸ் அலன்.

### 3வது பரிசு




சிறுநீர் கழிப்பறையில், தேவையான அளவு தண்ணீர் இறைக்கும் சாதனத்தை கண்டுபிடித்த, இமானுவேல் ரிச்சர்ட். இவர் மூன்றாம் பரிசு பெற்றார்.

## தகுதி பரிசு வென்றவர்கள்




ஜவுளி கடைகளில், வாடிக்கையாளர்கள், தங்களுக்கு விருப்ப உடையை மாற்ற, ‘டிரையல் ரூம்’ செல்ல வேண்டியதில்லை. இந்த சாதனத்தின் முன்நின்றாலே, விருப்பமான உடையை அணிந்தவாறு மாதிரி தோற்றம் மூலம், தேர்வு செய்துவிடலாம். **உள்படம்:** கண்டுபிடிப்பாளர் மகேந்திர வெள்ளிங்கிரி.




பார்வையற்றவர்கள், ‘சென்சார்’ மூலம், தங்கள் முன்னால் இருக்கும் பொருட்களை அறிந்து, தங்களது பயணத்தை மாற்றிக் கொள்ள உதவும் தலைக்கவசத்துடன் கூடிய நவீன கேமரா. **உள்படம்:** பேராசிரியர் பாலகிருஷ்ணனின் படைப்பை, காட்சிக்கு வைத்திருந்த, மாணவி சுகாஷினி.




ரப்பர் மரங்களில் இருந்து, எளிய முறையில் ரப்பர் எடுப்பதற்கான புதிய முறை, கண்காட்சியில் விளக்கப்பட்டது. **உள்படம்:** இதை கண்டுபிடித்த கேரளாவைச் சேர்ந்த தங்கம்மா.




நடைபாதைகளில் பதிக்கும் விதத்தில், புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட, பிளாஸ்டிக் கழிவுகளை கொண்டு தயாரிக்கப்பட்ட கட்டி. **உள்படம்:** கட்டியை கண்டுபிடித்த, பிரியலை செக்யூரியா.




கடல்பாசியில் இருந்து, வாகனங்களை இயக்குவதற்கான ஆயிலை தயாரிக்கும் முறை. **உள்படம்:** கண்டுபிடித்த அசோக்குமார்.




போக்குவரத்து சிக்னலில் காரை, தடுமாற்றமின்றி இயக்க உதவும் ‘சென்சார் சாதனத்தை’ கண்டுபிடித்த யுவராஜ்.




வாழை நாரில் கயிறு திரிக்கும் இயந்திரத்துடன், கண்டுபிடிப்பாளர் பாபு.




நவீன தேங்காய் பறிக்கும் இயந்திரம். **உள்படம்:** இதை கண்டுபிடித்த பிரகாசன் தத்தாரி.




பார்வையற்றோர் படிக்க ஏதுவாக, கண்டுபிடித்த ‘இ-புக்’ முறையை, செயல்விளக்கம் காண்பிக்கும் அனிதா பியூலா ஜோசப், கவுதமி பிரியா.




தேங்காய் பறிக்கும் இயந்திரம், செயல்விளக்கம் காண்பிக்கும் கோவர்தன்.

## ‘சிறுவர், இளைஞர்களிடம் படைப்புத்திறன் அதிகம்’

**கோவை, செப். 30 -**

‘‘சிறுவர்கள், இளைஞர்களிடம் படைப்புத் திறன் அதிகமுள்ளது,’’ என, தேசிய கண்டுபிடிப்பு மைய துணைத் தலைவர் அனில்குப்தா தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:

புதிய கண்டுபிடிப்பாளர்களை ஊக்குவிக்க, கண்காட்சி நடத்துவது வரவேற்கத்தக்கது. புதிய கண்டுபிடிப்புகளுக்கு இன்ஜினியரிங் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை. பிரச்னையை எப்படி தீர்க்கலாம், புதுமையாக என்ன சாதிக்கலாம், என்ற சிந்தனை போதும்.

வயது முதிர்ந்தவர்களை காட்டிலும் சிறுவர்கள், இளைஞர்களிடம் படைப்பு திறன் அதிகமுள்ளது. அவர்களை, ஊக்குவிக்க வேண்டும். பள்ளி மாணவர்களிடம், அறிவியல் கண்காட்சி மூலம், படைப்பு திறன் மேலோங்கியுள்ளது. கல்வி நிறுவனங்கள் ஊக்குவித்தால், படைப்புத்திறன் பன்மடங்காக வெளிப்படும். புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்க, தேசிய கண்டுபிடிப்பு மையம், ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்குகிறது.

கண்டுபிடிப்பாளர்களுக்கு மாநிலம் மற்றும் தேசிய அளவில், தளம் அமைக்க வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளை, கோவையிலுள்ள தொழிற்சாலைகள் ஊக்குவித்து, உயிர் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு, அனில்குப்தா தெரிவித்தார்.